கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்ரம்பர் 2014)

# GEOS 3203 விவசாயப் புவியியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

---

## பகுதி – I

01.(அ) விவசாயப்புவியியல் என்ற சொற்பதத்தினை பின்வரும் தலைப்புகளின்கீழ் விளக்குக.

1. சொல்லுருவாக்கத்தின் அடிப்படையில்
2. அகராதியின் அடிப்படையில்
3. அகராதி, சொல்லுருவாக்கத்தின் அடிப்படையில்

(09 புள்ளிகள்)

(ஆ) விவசாயப் புவியியல் கற்கை நெறியின் அவசியத்தினை சமகால விவசாய மற்றும் புவியியல் வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

(16 புள்ளிகள்)

02.(அ) விவசாய நடவடிக்கையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கினை குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(ஆ) உம்மால் குறிப்பிடப்பட்ட காரணிகள் ஒவ்வொன்றும் எவ்வகையில் விவசாய நடவடிக்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

(19 புள்ளிகள்)

03.(அ) வொன்தியூனனின் விவசாய இட அமைவு மாதிரியில் இருந்து நீர் தெரிந்துகொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) இவ் இட அமைவு மாதிரி எந்தளவிற்கு சமகால விவசாய நடவடிக்கையில் பொருத்தப்பாடுடையதாக காணப்படுகின்றது என்பதனை விமர்சன ரீதியாக ஆராய்க.

(20 புள்ளிக்ள)

## பகுதி – II

04. நிலச் சீர்குலைவு என்பதனால் கருதப்படுவது யாது? நிலச்சீர்குலைவினால் விவசாய நடவடிக்கைகள் எவ்வகையில் தாக்கங்களை எதிர்கொள்கின்றதென்பதனை உதாரணங்கள் தந்து விளக்குக.

(25 புள்ளிகள்)

05. "பசுமைப்புரட்சித் திட்டம் குறுங்கால நோக்கில் ஓர் வெற்றியளித்துள்ள திட்டமாயினும், நீண்டகாலத்தில் இத்திட்டம் விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் பாரிய அச்சுறுத்தலாகவே அமையும்." இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை தகுந்த உதாரணங்கள் கொண்டு விளக்குக.

(25 புள்ளிகள்)

06. யாதாயினும் இரண்டினுக்கு சிறு குறிப்பெழுதுக.

1. காலநிலை மாற்றமும் விவசாய நடவடிக்கைகளும்
2. விவசாய நடவடிக்கையில் நீரியல் முகாமைத்துவத்தின் பங்கு
3. இலங்கையின் விவசாய நடவடிக்கைகளும் அதன் எதிர்காலமும்

(12 ½ x 2 = 25)